# பகுதி-ஆ – பொது அறிவு (ம) பகுதி-இ – திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு

# Part-B – General Studies & Part-C – Aptitude and Mental Ability

வினாக்கள் : 101–200 மொத்த மதிப்பெண்கள் : 150

Questions : 101–200 Total Marks : 150

101. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Financial Assistance to Dependent children | 1. | Between the age group of 18 and 21 years |
| (b) | Maintenance of Orphan and Destitute Girls | 2. | Providing destitute, orphan and unattached children |
| (c) | Foster Care Services Scheme | 3. | Children below the age of 16 years |
| (d) | State After-Care Home for Boys | 4. | Children between the age of 6 and 16 years |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) Answer not known

கீழ்காண்பவற்றை சரியாக பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சார்ந்திருக்கும் குழந்தைகளுக்கு நிதியுதவி | 1. | 18 மற்றும் 21 வயதுக்கு இடைப்பட்டவர்கள் |
| (b) | ஆதரவற்ற மற்றும் அனாதை சிறுமிகளை பராமரித்தல் | 2. | ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் தனியான சிறுவர்களுக்கு வழங்குதல் |
| (c) | வளர்ப்பு மற்றும் பராமரிப்பு சேவைகள் திட்டம் | 3. | 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் |
| (d) | சிறுவர்களுக்கான பராமரிப்பு இல்லம் | 4. | 6 மற்றும் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

102. As per the Tamilnadu Economic Survey of 2024-2025. Arrange the following in the ascending order based on the productivity.

(1) Paddy productivity

(2) Maize productivity

(3) Oil seeds, Groundnut and Sugarcane productivity

(A) (1) (2) (3)

(B) (3) (2) (1)

(C) (2) (1) (3)

(D) (3) (1) (2)

(E) Answer not known

2024-2025 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கையின் படி, அதன் உற்பத்தித்திறனைப் பொறுத்து பின்வருவனவற்றை ஏறுவரிசையில் வரிசைப்படுத்துங்கள்.

(1) நெல் உற்பத்தித்திறன்

(2) மக்காச்சோளம் உற்பத்தித்திறன்

(3) எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை மற்றும் கரும்பு உற்பத்தித்திறன்

(A) (1) (2) (3)

(B) (3) (2) (1)

(C) (2) (1) (3)

(D) (3) (1) (2)

(E) விடை தெரியவில்லை

103. Find out the Incorrect statement(s) about the Tamilnadu Health System Reform Program (TNHSRP)

(i) This program was supported by World Bank.

(ii) This program is sponsored by the Central and State Government in the ratio of 60 : 40.

(iii) It is implemented by the Department of Health and Family Welfare of Tamilnadu on Program for Results basis.

(iv) This program aims to achieve the goal of SDG 9.

(A) (i) and (iii) only

(B) (ii) and (iii) only

(C) (ii) and (iv) only

(D) (iii) only

(E) Answer not known

தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டம் (TNHSRP) பற்றிய தவறான கூற்றினை கண்டறிக.

(i) இத்திட்டத்திற்கு உலக வங்கி ஆதரவு அளிக்கின்றது.

(ii) இந்த திட்டம் மத்திய மாநில அரசாங்கத்தால் 60 : 40 என்ற விகிதத்தில் பயன்பாட்டு நிதியுதவி வழங்கப்படுகிறது.

(iii) இந்த முடிவு அடிப்படையில் அமைந்த திட்டத்தினை தமிழ்நாட்டின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையால் செயல்படுத்தப்படுகிறது.

(iv) இந்த திட்டம் SDG 9 ஐ இலக்காக அடைவதை நோக்கமாக கொண்டுள்ளது.

(A) (i) மற்றும் (iii) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) மற்றும் (iv) மட்டும்

(D) (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

104. Assertion [A] : In 1892, Tremenheere report was accepted by the Government for increasing the income of the Government, to allot the poramboke land to down trodden community.

Reason [R] : In Chengalpet, the Panchamer Schools were run by the Philanthropic individuals in Panchami Land for promoting Education for downtrodden community people.

(A) [A] is true [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false [R] is true

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : அரசு, புறம்போக்கு நிலங்களை தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு வழங்குவதன் வாயிலாக அரசின் நிதி வருவாயினை பெருக்கி கொள்ளலாம் என்கிற 1892–ம் ஆண்டைய திரமென்ஹீர் அறிக்கையினை ஏற்றுக்கொண்டது.

காரணம் [R] : மனித நேயமிக்க நபர்கள் தாழ்த்தப்பட்ட சமூக மக்களின் கல்வியினை மேம்படுத்தும் பொருட்டு பஞ்சமர் பள்ளிகளை செங்கல்பட்டில் உள்ள பஞ்சமி நிலங்களில் நடத்தி வந்தனர்.

(A) [A] சரி [R] தவறு

(B) [A] மற்றும் [R] சரி மேலும் [R] ஆனது [A] யினுடைய சரியான விளக்கம் ஆகும்

(C) [A] தவறு [R] சரி

(D) [A] மற்றும் [R] சரி ஆனால் [R] ஆனது [A] யினுடைய சரியான விளக்கம் அல்ல

(E) விடை தெரியவில்லை

105. Identify the incorrectly paired matches :

| | | | |
|---|---|---|---|
| (1) | Lokpal and Lokayuktas Act came into force | – | January 16th, 2014 |
| (2) | Tamil declared as Classical Language | – | Oct 10, 2004 |
| (3) | Election Commission of India | – | Article 324 |
| (4) | National Integration Council in India | – | 1960 |

(A) (1) and (3)
(B) (2) and (4)
(C) (3) and (4)
(D) (4) and (1)
(E) Answer not known

பின்வருவனவற்றில் தவறாக பொருத்தப்பட்டுள்ளவற்றை கண்டறிக.

| | | | |
|---|---|---|---|
| (1) | லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் நடைமுறைக்கு வந்த காலம் | – | ஜனவரி 16, 2014 |
| (2) | தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது | – | அக்டோபர் 10, 2004 |
| (3) | இந்தியத் தேர்தல் ஆணையம் | – | சட்டப்பிரிவு 324 |
| (4) | இந்திய தேசிய ஒருங்கிணைப்பு ஆணையம் | – | 1960 |

(A) (1) மற்றும் (3)
(B) (2) மற்றும் (4)
(C) (3) மற்றும் (4)
(D) (4) மற்றும் (1)
(E) விடை தெரியவில்லை

106. The purpose of "Surya Ghar Muft Bijli Yojana" is

(A) Installing roof top solar
(B) Providing Houses to the poor
(C) Insurance to old age people
(D) Financing to small industries
(E) Answer not known

"சூர்ய கர் முஃப்ட் பிஜிலி யோஜனா" என்ற திட்டத்தின் நோக்கமானது

(A) வீட்டுக்கூரைகளில் சூரிய ஒளி மின்சாரம் நிறுவுவது
(B) ஏழைகளுக்கான வீடுகள் வழங்குவது
(C) வயது வந்தோருக்கான காப்பீடு வழங்குவது
(D) சிறிய தொழிற்சாலைகளுக்கு நிதி வழங்குவது
(E) விடை தெரியவில்லை

107. Assertion [A] : Zamindari system was created by the East India Company when in 1793. Lord Cornwallis entered into permanent settlement.

Reason [R] : Under the settlement, the landlords were declared full properties large areas of land.

(A) [A] is true, [R] is false

(B) [A] is false, [R] is true

(C) Both [A] and [R] are false

(D) Both [A] and [R] are true, but [R] is the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : 1793 ல் காரன்வாலிஸ் பிரபுவின் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியின் கீழ் ஜமீன்தாரி முறை கொண்டுவரப்பட்டது.

காரணம் [R] : இம்முறையினால் ஜமீன்தார்கள் முழு நிலத்தின் உரிமையாளர்களாகத் தங்களை அறிவித்துக்கொண்டனர்.

(A) [A] சரி, [R] தவறு

(B) [A] தவறு, [R] சரி

(C) [A] மற்றும் [R] இரண்டும் தவறு

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R], [A] ன் சரியான விளக்கம்

(E) விடை தெரியவில்லை

108. Assertion [A] : Goods and Services Tax in India is a comprehensive, multistage, destination-based tax that is levied on every value addition.

Reason [R] : The moto is 'One Tax, One Market, One Nation'.

(A) [A] is true, but [R] is false

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரியானது விரிவான, பல படிநிலைகளில் இலக்கு அடிப்படையில் ஒவ்வொரு மதிப்புக் கூட்டின் போது விதிக்கப்படுகிறது.

காரணம் [R] : இதன் நோக்கம் "ஒரே வரி, ஒரே சந்தை, ஒரே நாடு" ஆகும்.

(A) [A] சரி, ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் ஆகும்

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல [A] என்பது சரி

(E) விடை தெரியவில்லை

109. Arrange the following Finance Ministers of Tamil Nadu according to the Budget Year (Chronological Order)

1. Mr. Paneerselvam
2. Dr. Nedunchezhiyan
3. Mr. Palanivel Thiagarajan
4. Mr. Thangam Thennarasu

(A) 1 2 3 4

(B) 4 3 2 1

(C) 2 1 3 4

(D) 1 4 2 3

(E) Answer not known

கீழ்க்கண்ட தமிழ்நாடு நிதி அமைச்சர்களை அவர்களின் பட்ஜெட் ஆண்டை அடிப்படையாக கொண்டு காலவரிசைப்படி வரிசைப்படுத்துக.

1. திரு. பன்னீர் செல்வம்
2. டாக்டர். நெடுஞ்செழியன்
3. திரு. பழனிவேல் தியாகராஜன்
4. திரு. தங்கம் தென்னரசு

(A) 1 2 3 4

(B) 4 3 2 1

(C) 2 1 3 4

(D) 1 4 2 3

(E) விடை தெரியவில்லை

110. Assertion [A] : The plan period 1966 – 69 were called as "Annual plans or plan holiday".

Reason [R] : Because of the two major conflicts with China and Pakistan.

(A) [A] is true, [R] is false

(B) Both [A] and [R] are true, but [R] is not a correct explanation of [A]

(C) Both [A] and [R] are true, but [R] is the correct explanation of [A]

(D) [A] is false, [R] is true

(E) Answer not known

கூற்று [A] : 1966 – 69 திட்டக் காலம் "ஆண்டுத் திட்டம் அல்லது திட்ட விடுமுறைக் காலம்" என அழைக்கப்படுகிறது.

காரணம் [R] : ஏனெனில் சீனா மற்றும் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட இரண்டு பெரிய மோதல்கள்.

(A) [A] சரி, [R] தவறு

(B) [A]-யும் [R]-ம் சரி, ஆனால் [R], [A] விற்கான சரியான விளக்கமல்ல

(C) [A]-யும் [R]-ம் சரி, ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கமாகும்

(D) [A] தவறு, [R] சரி

(E) விடை தெரியவில்லை

111. Statement : Thiruvalluvar has captured certain features like pride and administration of the Three Great Kings (Moovendhar) in his couplets.

Reason : Thiruvalluvar wanted to portray the administrative skills of Kings.

(A) Both Statement and Reason are correct
(B) Reason is incorrect but Statement is correct
(C) Both Statement and Reason are incorrect
(D) Statement is incorrect but Reason is correct
(E) Answer not known

கூற்று : தமிழகத்தில் வாழ்ந்த மூவேந்தர்களின் பெருமை ஆட்சித் திறம் பற்றி ஒரு சில கருத்துக்களை மட்டுமே திருவள்ளுவர் தமது குறட்பாக்களில் தந்துள்ளார்.

காரணம் : மன்னர்களின் ஆட்சித் திறம் பற்றிய கருத்துக்களைக் கூற வேண்டும் எனக் கருதினார்.

(A) கூற்று காரணம் இரண்டும் சரி
(B) காரணம் தவறு ஆனால் கூற்று சரி
(C) கூற்று காரணம் இரண்டும் தவறு
(D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
(E) விடை தெரியவில்லை

112. Give the chapter No. __________ in Thirukkural that talks about Ascetic Virtues.

(A) 18 (B) 13
(C) 12 (D) 16
(E) Answer not known

திருக்குறளில் அமைந்துள்ள துறவறவியல் அதிகாரத்தின் எண்ணைக் குறிப்பிடுக.

(A) 18 (B) 13
(C) 12 (D) 16
(E) விடை தெரியவில்லை

113. Who is the author of "Valluvarum Kuralum"?

(A) Tamilannal

(B) Ki.Aa.Pe. Vishwanatham

(C) Ra.Pi. Sethupillai

(D) Thiru.Vi. Kalyanasundaram

(E) Answer not known

"வள்ளுவரும் குறளும்" என்ற நூலின் ஆசிரியர்

(A) தமிழண்ணல்

(B) கி.ஆ.பெ. விசுவநாதம்

(C) ரா.பி. சேதுப்பிள்ளை

(D) திரு.வி. கலியாண சுந்தரனார்

(E) விடை தெரியவில்லை

114. Who was the first to draw the portrait of Thiruvalluvar?

(A) Venkata Krishna Pandithar

(B) Venugopala Sharma

(C) Saminatha Sharma

(D) Vannacharaba Dheetchithar

(E) Answer not known

திருவள்ளுவர் உருவத்தினை முதன் முதலில் ஓவியமாக வரைந்தவர்

(A) வேங்கட கிருஷ்ணபண்டிதர்

(B) வேணுகோபால சர்மா

(C) சாமிநாத சர்மா

(D) வண்ணச்சரப தீட்சிதர்

(E) விடை தெரியவில்லை

115. Choose the right matches.

| | | | |
|---|---|---|---|
| (1) | New India | – | Bharathi |
| (2) | Thesapakthan | – | V.V. Subramanian |
| (3) | Nava Sakthi | – | Thiru. V. Kalyanasundaram |
| (4) | The Hindu | – | G. Subramaniam |

(A) (1) and (2) are correct

(B) (2) and (3) are correct

(C) (3) and (4) are correct

(D) (1) and (4) are correct

(E) Answer not known

சரியான இணையை கண்டறிக.

| | | | |
|---|---|---|---|
| (1) | நியூ இந்தியா | – | பாரதியார் |
| (2) | தேசபக்தன் | – | வ.வே. சுப்பிரமணியன் |
| (3) | நவசக்தி | – | திரு.வி. கலியாணசுந்தரம் |
| (4) | தி இந்து | – | G. சுப்பிரமணியம் |

(A) (1) மற்றும் (2) சரி

(B) (2) மற்றும் (3) சரி

(C) (3) மற்றும் (4) சரி

(D) (1) மற்றும் (4) சரி

(E) விடை தெரியவில்லை

116. Which of the following statements are true about the Theosophical Movement?

(i) The Theosophical society was founded by Madam Blavatsky and Col. H.S. Olcott in New York.

(ii) In 1888 Mrs. Annie Besant joined the society in India.

(iii) The headquarters of the society in Adyar.

(A) (i) and (ii)

(B) (ii) and (iii)

(C) (i) and (iii)

(D) (iii) only

(E) Answer not known

பிரம்மஞான சபை பற்றிய சரியான வாக்கியங்களை தேர்வு செய்க.

(i) மேடம் பிளாவட்ஸ்கி மற்றும் கர்னல் H.S. ஆல்காட் ஆகியோரால் பிரம்மஞான சபை நியூயார்க்கில் தோற்றுவிக்கப்பட்டது.

(ii) 1888-ல் இந்தியாவில் அன்னிபெசன்ட் அம்மையார் இதில் இணைந்தார்.

(iii) இதன் தலைமையகம் சென்னை அடையாறில் உள்ளது.

(A) (i) மற்றும் (ii)

(B) (ii) மற்றும் (iii)

(C) (i) மற்றும் (iii)

(D) (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

117. Assertion [A] : E.V.R. Periyar started the Self-Respect Movement in 1925.

Reason [R] : New India was the official Newspaper of the Self-Respect Movement.

(A) [A] is true, but [R] is false

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : 1925-இல் ஈ.வே.ரா பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

காரணம் [R] : சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் நியூ இந்தியா ஆகும்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A] யினுடைய சரியான விளக்கம்

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] யினுடைய சரியான விளக்கமல்ல என்பது சரி

(E) விடை தெரியவில்லை

118. Consider the following statements and Identify the wrong answers

(1) On 1st September 1798 Major Bannerman served an ultimatum directing Kattabomman to see him at Palayamkottai.

(2) Kattabomman's Fort 500 feet long and 300 feet broad, was constructed entirely of Mud.

(3) On September 16, 1799 Veera Pandiya Kattabomman was tried before an assembly of Palayakkarars at Kayatar.

(4) On 1st June, 1799 Kattabomman, attended by 500 men, proceeded to Sivagangai.

(A) (1) is wrong
(B) (2) is wrong
(C) (1) and (3) are wrong
(D) (2) and (4) are wrong
(E) Answer not known

கீழ்கண்ட கூற்றுகளை கருத்தில் கொண்டு தவறான விடையை கண்டறி.

(1) 1798 செப்டம்பர், 1 அன்று மேஜர் பானர்மேன் தன்னைக் கட்டபொம்மன் பாளையங்கோட்டையில் சந்திக்கும்படி இறுதி எச்சரிக்கை விடுவித்தார்.

(2) கட்டபொம்மனின் கோட்டை 500 அடி நீளத்திலும் 300 அடி அகலத்திலும் முழுவதும் மண்ணினால் கட்டப்பட்டிருந்தது.

(3) 1799 செப்டம்பர் 16 அன்று பானர்மேன் கட்டபொம்மனை கயத்தாறு என்னுமிடத்தில் பாளையக்காரர்கள் கூடியிருந்த அவையில் விசாரணை செய்தார்.

(4) 1799 ஜூன் 1 அன்று கட்டபொம்மன் 500 ஆட்களுடன் சிவகங்கை சென்றார்.

(A) (1) மட்டும் தவறு
(B) (2) மட்டும் தவறு
(C) (1) மற்றும் (3) மட்டும் தவறு
(D) (2) மற்றும் (4) மட்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

119. Which of the following statements are true?

(1) Congress boycotted the election which was held in 1923 in Chennai.

(2) Swaraj Party won 11 seats.

(3) Justice Party formed Ministry in Chennai.

(4) Kamaraj led the Non-Co-operation movement in Chennai.

(A) (1), (4) are correct (B) (1), (2) are correct

(C) (1), (3) are correct (D) (1), (2), (3) are correct

(E) Answer not known

சரியான வாக்கியங்களைத் தெரிவு செய்க.

(1) காங்கிரஸ் கட்சி, 1923ல் சென்னையில் நடந்த தேர்தலை புறக்கணித்தது.

(2) சுயராஜ்ய கட்சி 11 இடங்களில் வெற்றி பெற்றது.

(3) சென்னையில் நீதிகட்சி அமைச்சரவை அமைத்தது.

(4) காமராஜர் சென்னையில் ஒத்துழையாமை இயக்கத்தினை வழிநடத்தினார்.

(A) (1), (4) சரியானது (B) (1), (2) சரியானது

(C) (1), (3) சரியானது (D) (1), (2), (3) சரியானது

(E) விடை தெரியவில்லை

120. Match the following :

(a) Karaikkal Ammaiyar — 1. Thiruvantadi

(b) Andal — 2. Kachhikalambagam

(c) Aranganadha Mudaliyar — 3. Pavaippattu

(d) Seraman Perumal Nayanar — 4. Moothathiruppathigangal

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக :

(a) காரைக்கால் அம்மையார் — 1. திருவந்தாதி

(b) ஆண்டாள் — 2. கச்சிக்கலம்பகம்

(c) அரங்கநாத முதலியார் — 3. பாவைப்பாட்டு

(d) சேரமான் பெருமாள் நாயனார் — 4. மூத்ததிருப்பதிகங்கள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

121. Which of the following statements are true about Sivakalai excavation?

(i) Sivakalai excavation located in North shore of river Thamiraparani.

(ii) Tamil society lived in Sivakalai considered very ancient.

(iii) Copper and gold goods are found.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (iii) only
(E) Answer not known

கீழ்கண்ட சிவகளை அகழாய்வு வாக்கியத்தில் பொருத்தமான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

(i) சிவகளை அகழாய்வு தாமிரபரணி ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ளது.

(ii) சிவகளைப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் மிகப்பழமையானதாக கருதப்படுகிறது.

(iii) செம்பு மற்றும் தங்கத்திலான பொருள்கள் இங்கு கிடைக்கப்பெற்றது.

(A) (i) மட்டும் சரி
(B) (i) மற்றும் (iii) சரி
(C) (i) மற்றும் (ii) சரி
(D) (iii) மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை

122. What is the crucial role played by noncoding RNA's?

(A) encode for proteins
(B) replications
(C) gene regulation
(D) carbohydrate synthesis
(E) Answer not known

குறியிடாத RNA (NCRNA) என்ன முக்கியப் பங்கு வகிக்கிறது?

(A) புரதத்திற்கான குறியாக்கம்
(B) பிரதி
(C) மரபணு கட்டுப்பாடு
(D) கார்போஹைட்ரேட் தொகுப்பு
(E) விடை தெரியவில்லை

123. Choose the right matches among the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | Five Kingdom System | – | R.H. Whittaker |
| (2) | Six Kingdom System | – | Carl Woese, et al |
| (3) | Four Kingdom System | – | Carl Linnaeus |
| (4) | Three Kingdom System | – | Ernst Haeckel |

(A) (1) only correct
(B) (1), (2) and (4) are correct
(C) (1) and (2) are correct
(D) (1), (2) and (3) are correct
(E) Answer not known

சரியான இணையைக் கண்டறிக :

| | | | |
|---|---|---|---|
| (1) | ஐந்துலக வகைப்பாடு | – | R.H. விட்டாக்கெர் |
| (2) | ஆறுலக வகைப்பாடு | – | கார்ல் வெயிசி, ம.ப. |
| (3) | நான்குலக வகைப்பாடு | – | கார்ல் லின்னேயஸ் |
| (4) | மூன்றுலக வகைப்பாடு | – | எர்னெஸ்ட் ஹெக்கேல் |

(A) (1) மட்டும் சரி
(B) (1), (2) மற்றும் (4) சரியானவை
(C) (1) மற்றும் (2) சரியானவை
(D) (1), (2) மற்றும் (3) சரியானவை
(E) விடை தெரியவில்லை

124. 0.10 M of weak acid is found to be dissociated to the extent of 1.20% at 25°C. Its dissociation constant is

(A) $1.44 \times 10^{5}$
(B) $1.44 \times 10^{-4}$
(C) $1.44 \times 10^{-5}$
(D) $1.44 \times 10^{4}$
(E) Answer not known

0.10 M செறிவுடைய வலிமை குறைந்த அமில கரைசல் 25°C-ல் 1.20% பிரிகை அடைகிறது எனில், பிரிகை மாறிலியின் மதிப்பு

(A) $1.44 \times 10^{5}$
(B) $1.44 \times 10^{-4}$
(C) $1.44 \times 10^{-5}$
(D) $1.44 \times 10^{4}$
(E) விடை தெரியவில்லை

125. The GSLV-F15 is launched on __________ by ISRO.

(A) January 29, 2025

(B) March 08, 2025

(C) January 29, 2024

(D) March 08, 2024

(E) Answer not known

ISRO-வால் GSLV-F15 ராக்கெட் ஏவப்பட்ட தினம் __________.

(A) ஜனவரி 29, 2025

(B) மார்ச் 08, 2025

(C) ஜனவரி 29, 2024

(D) மார்ச் 08, 2024

(E) விடை தெரியவில்லை

126. Which of the following is incorrectly matched?

| | | | |
|---|---|---|---|
| (1) | Trans Siberian Railway line | – | It connects Baltic Sea and Pacific Ocean |
| (2) | Trans Caspian Railway line | – | It connects Central Asia and Japan |
| (3) | Canadian Pacific Railway line | – | It connects Atlantic Ocean and Indian Ocean |
| (4) | Trans-Continental Railway line | – | It connects Buenos Aires with Valparaiso |

(A) (1) only
(B) (2) only
(C) (3) only
(D) (4) only
(E) Answer not known

கீழ்கண்டவற்றுள் எது தவறாக பொருந்தி உள்ளது?

| | | | |
|---|---|---|---|
| (1) | டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதை | – | இது பால்டிக் கடலையும், பசிபிக் பெருங்கடலையும் இணைக்கிறது |
| (2) | டிரான்ஸ் காஸ்பியன் இருப்புப்பாதை | – | இது மத்திய ஆசியாவையும் ஜப்பானையும் இணைக்கிறது |
| (3) | கனேடியன் பசிபிக் இருப்புப்பாதை | – | இது அட்லாண்டிக் பெருங்கடலையும், இந்திய பெருங்கடலையும் இணைக்கிறது |
| (4) | டிரான்ஸ் கான்டினென்டல் இருப்புப்பாதை | – | இது பியூனஸ் அயர்ஸ் நகரத்தையும் வால்பரைஸோ நகரத்தையும் இணைக்கிறது |

(A) (1) மட்டும்
(B) (2) மட்டும்
(C) (3) மட்டும்
(D) (4) மட்டும்
(E) விடை தெரியவில்லை

127. Who among the following was the Indian Prime Minister when the 42nd Amendment Act was passed?

(A) Jawaharlal Nehru
(B) V.P. Singh
(C) Indira Gandhi
(D) Morarji Desai
(E) Answer not known

இந்திய அரசமைப்பின் 42-ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது இந்தியாவின் பிரதமராக இருந்தவர் யார்?

(A) ஜவஹர்லால் நேரு
(B) வி.பி. சிங்
(C) இந்திராகாந்தி
(D) மொரார்ஜி தேசாய்
(E) விடை தெரியவில்லை

128. Assertion [A] : The Pallavas constructed the Cave temples without brick, wood, metal and sudhai.

Reason [R] : The stones kept one upon another and not bound with plaster is known as "Katraligal".

(A) [A] true, but [R] false
(B) [A] false but [R] true
(C) Both [A] and [R] are true
(D) Both [A] and [R] are false
(E) Answer not known

கூற்று [A] : பல்லவர்கள், மரம், சுதை, உலோகம், செங்கல் போன்ற கட்டுமானப் பொருள்கள் இன்றிக் குடைவரைக் கோவில்களை உருவாக்கினர்.

காரணம் [R] : கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிச் சுண்ணம் சேர்க்காமல் கட்டப்படும் கட்டடங்களுக்குக் "கற்றளிகள்" என்று பெயர்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] தவறு ஆனால் [R] சரி
(C) [A] மற்றும் [R] இரண்டும் சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

129. Choose the wrong pair :

| | | | |
|---|---|---|---|
| (1) | South Dravidan Language | – | Malayalam |
| (2) | East Dravidan Language | – | Munda |
| (3) | Central Dravidan Language | – | Telugu |
| (4) | North Dravidan Language | – | Kuruk |

(A) (1) (B) (2)

(C) (3) (D) (4)

(E) Answer not known

தவறான இணையைக் கண்டுபிடி.

| | | | |
|---|---|---|---|
| (1) | தென்திராவிட மொழி | – | மலையாளம் |
| (2) | கிழக்கு திராவிட மொழி | – | முண்டா |
| (3) | நடுத்திராவிட மொழி | – | தெலுங்கு |
| (4) | வடதிராவிட மொழி | – | குரூக் |

(A) (1) (B) (2)

(C) (3) (D) (4)

(E) விடை தெரியவில்லை

130. Assertion [A] : Rabindranath Tagore surrendered his knighthood.

Reason [R] : On 13th April 1919 Jalianwala Bagh Massacre occurred in Amritsar.

(A) [A] True [R] False

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is False [R] is True

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : இரவீந்தரநாத் தாகூர் தனது 'சர்' பட்டத்தைத் துறந்தார்.

காரணம் [R] : 13 ஏப்ரல் 1919 அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடைப்பெற்றது.

(A) [A] சரி [R] தவறு

(B) [A] மற்றும் [R] சரி, [R] [A] யினுடைய சரியான விளக்கம்

(C) [A] தவறு [R] சரி

(D) [A] மற்றும் [R] சரி ஆனால் [R], [A] யினுடைய சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

131. Assertion [A] : The Indian National Congress First Conference convened on 28th December 1885 in Bombay.

Reason [R] : Tamil Nadu region represented and attend 21 members.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false [R] is true

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு 1885 டிசம்பர் 28 ஆம் தேதி பம்பாயில் கூடியது.

காரணம் [R] : தமிழ்நாட்டு பகுதியிலிருந்து 21 பேர் கலந்து கொண்டனர்.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

(B) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி மற்றும் கூற்று [A] விற்கு காரணம் [R] சரியான விளக்கமாகும்

(C) கூற்று [A] தவறு காரணம் [R] சரி

(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] சரி ஆனால் காரணம் [R] கூற்று [A] விற்கு சரியான விளக்கமல்ல என்பது சரி

(E) விடை தெரியவில்லை

132. Which of the following statements are true about the Indus Civilisation?

(i) In the 1920s Martimer Wheeler excavated the Harappan sites.

(ii) The longest text has about twenty six signs.

(iii) The term "Meluhha" in the Prakrit inscriptions refers to the Indus region.

(iv) The "Priest King" of steatite was discovered in Mohenjo-Daro.

(A) (i) and (ii) only

(B) (i) and (iii) only

(C) (ii) and (iii) only

(D) (ii) and (iv) only

(E) Answer not known

சிந்து நாகரிகம் குறித்து பின்வரும் கூற்றுகளில் எவை உண்மையானவை?

(i) 1920களில் மார்டிமர் வீலர் ஹரப்பா பகுதிகளில் அகழாய்வுகள் நடத்தினார்.

(ii) மிக நீளமானதாகக் கருதப்படும் எழுத்துத்தொடர் 26 குறியீடுகளைக் கொண்டுள்ளது.

(iii) பிராகிருத கல்வெட்டுகளில் "மெலுகா" என்ற சொல் சிந்து பகுதியைக் குறிக்கிறது.

(iv) ஸ்டீட்டைட் கல்லில் அமைந்த "மதகுரு அரசன்" மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டது.

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

133. The correct statements on the New Chief Election Commissioner of India are:

(i) Gyanesh Kumar took charge as the 26th Chief Election Commissioner of India on February 19th, 2025.

(ii) He is a Kerala cadre of the Indian Administrative Service in the 1989 batch.

(iii) He has been responsible for handling various departments as the secretary to the government of Kerala.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

புதியதாக பதவியேற்றுள்ள இந்திய தலைமைத் தேர்தல் ஆணையரைப் பற்றிய சரியான கூற்றுகளானது:

(i) ஞானேஷ் குமார் பிப்ரவரி 19, 2025 அன்று இந்தியாவின் 26வது தலைமைத் தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்றார்.

(ii) அவர் 1989 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியின் கேரள பிரிவு அதிகாரி ஆனார்.

(iii) கேரள அரசின் செயலாளராக பல்வேறு துறைகளைக் கையாளும் பொறுப்பை அவர் வகித்துள்ளார்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

134. Match the following :

| | Name of the Act | | Enacted year |
|---|---|---|---|
| (a) | Consumer Protection Rules | 1. | 1930 |
| (b) | Drug Control Act | 2. | 1987 |
| (c) | The monopolies and Restrictive Trade Practice Act | 3. | 1950 |
| (d) | Goods and Services Sales Act | 4. | 1969 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known

கீழ்கண்டவற்றைப் பொருத்துக.

| | சட்டத்தின் பெயர் | | இயற்றப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| (a) | நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் | 1. | 1930 |
| (b) | மருந்துக் கட்டுப்பாடு சட்டம் | 2. | 1987 |
| (c) | ஏகபோக மற்றும் கட்டுப்பாட்டு வர்த்தக நடைமுறைகள் சட்டம் | 3. | 1950 |
| (d) | பொருட்கள் விற்பனைச் சட்டம் | 4. | 1969 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

135. Consider the Assertion [A] and Reason [R]

Assertion [A] : Supreme court judges are to be appointed by the President.

Reason [R] : In the case of appointment of the Judges the Law Minister of India shall always be consulted.

(A) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(B) Both [A] and [R] are true but [R] is not a correct explanation of [A]

(C) [A] is true but [R] is false

(D) [A] is false but [R] is true

(E) Answer not known

கருத்து [A] மற்றும் காரணம் [R] வினாவை கருதுக.

கருத்து [A] : குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்கிறார்.

காரணம் [R] : நீதிபதிகளை நியமனம் செய்யும் பொழுது சட்ட அமைச்சரையும் கலந்தாலோசிக்க வேண்டும்.

(A) [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] க்கான சரியான விளக்கம்

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A] யின் சரியான விளக்கம் இல்லை

(C) [A] சரி ஆனால் [R] தவறு

(D) [A] தவறு ஆனால் [R] சரி

(E) விடை தெரியவில்லை

136. Arrange in chronological order on Inter-State council

(1) Punchhi Commission

(2) Rajamannar Commission

(3) Sarkaria Commission

(4) Venkatachaliah Commission

(A) (3), (4), (2), (1)

(B) (2), (1), (4), (3)

(C) (2), (4), (3), (1)

(D) (2), (3), (4), (1)

(E) Answer not known

மாநிலங்களுக்கிடையேயான குழுக்களை காலவரிசைப்படி ஒழுங்குபடுத்தவும்.

(1) புன்ச்சி குழு

(2) இராஜமன்னார் குழு

(3) சர்க்காரியா குழு

(4) வெங்கட செல்லையா குழு

(A) (3), (4), (2), (1)

(B) (2), (1), (4), (3)

(C) (2), (4), (3), (1)

(D) (2), (3), (4), (1)

(E) விடை தெரியவில்லை

137. Choose the right match :

(1) Retirement age of the Supreme Court Judge – 60 years

(2) Minimum age for contesting for the President of India – 35 years

(3) Minimum age for becoming Rajya Sabha member – 30 years

(4) Minimum age for becoming Lok Sabha member – 21 years

(A) (1) and (3) are correct
(B) (1) and (2) are correct
(C) (2) and (3) are correct
(D) (3) and (4) are correct
(E) Answer not known

சரியான இணையைத் தெரிவு செய்க

(1) உச்ச நீதிமன்ற நீதிபதி ஓய்வு வயது – 60

(2) இந்திய குடியரசு தலைவர் தேர்தலில் நிற்பதற்கான குறைந்தபட்ச வயது – 35

(3) மேலவை உறுப்பினராக குறைந்தபட்ச வயது – 30

(4) கீழவை உறுப்பினராக குறைந்தபட்ச வயது – 21

(A) (1) மற்றும் (3) சரியானவை
(B) (1) மற்றும் (2) சரியானவை
(C) (2) மற்றும் (3) சரியானவை
(D) (3) மற்றும் (4) சரியானவை
(E) விடை தெரியவில்லை

138. Arrange the following in chronological order :

1. Bharat Ratna
2. Padma Vibhushan
3. Padma Sri
4. Padma Bhushan

(A) 2, 3, 1, 4

(B) 1, 2, 4, 3

(C) 4, 3, 2, 1

(D) 3, 1, 4, 2

(E) Answer not known

பின்வரும் விருதுகளை காலவரிசைப்படி வரிசைப்படுத்துக.

1. பாரத ரத்னா
2. பத்ம விபுஷன்
3. பத்மஸ்ரீ
4. பத்ம பூஷன்

(A) 2, 3, 1, 4

(B) 1, 2, 4, 3

(C) 4, 3, 2, 1

(D) 3, 1, 4, 2

(E) விடை தெரியவில்லை

139. Match the following :

| Name of the States | | States in Part |
|---|---|---|
| (a) Himachal Pradesh | 1. | A |
| (b) Rajasthan | 2. | D |
| (c) West Bengal | 3. | B |
| (d) The Andaman and Nicobar Islands | 4. | C |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) Answer not known

பொருத்துக :

| மாநிலங்கள் பெயர் | | மாநிலங்கள் இருக்கும் பகுதி |
|---|---|---|
| (a) இமாச்சலப் பிரதேசம் | 1. | A |
| (b) இராஜஸ்தான் | 2. | D |
| (c) மேற்கு வங்காளம் | 3. | B |
| (d) அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் | 4. | C |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

140. P and Q can do a piece of work in 20 days and 40 days respectively. They started the work together and Q left after some days of work and P finished the remaining work in 8 days. After how many days from the start did Q leave?

(A) 9 days

(B) 10 days

(C) 8 days

(D) 11 days

(E) Answer not known

P மற்றும் Q ஆகியோர் ஒரு வேலையை முறையே 20 மற்றும் 40 நாட்களில் முடிப்பர். அவர்கள் இருவரும் ஒன்றாக சேர்ந்து வேலையை தொடங்கினர். சில நாட்கள் வேலை செய்த பிறகு Q என்பவர் சென்றுவிடுகிறார். மீதமுள்ள வேலையை P என்பவர் 8 நாட்களில் முடிக்கிறார் எனில் தொடங்கியதிலிருந்து எத்தனை நாட்களுக்குப் பிறகு Q வேலையை விட்டுச் சென்றார்?

(A) 9 நாட்கள்

(B) 10 நாட்கள்

(C) 8 நாட்கள்

(D) 11 நாட்கள்

(E) விடை தெரியவில்லை

141. Divide Rs. 2,602 between A and B, so that the amount of A at the end of 6 years is equal to the amount of B at the end of 8 years, compound interest being at 4% per annum.

(A) Rs. 1,300, Rs. 1,252
(B) Rs. 1,452, Rs. 1,150
(C) Rs. 1,302, Rs. 1,300
(D) Rs. 1,352, Rs. 1,250
(E) Answer not known

ஆண்டுக்கு 4% கூட்டுவட்டியில் 6 வருடங்களில் A க்கு கிடைக்கும் தொகையானது 8 வருடங்களில் B ன் தொகைக்குச் சமமாக இருக்கும் எனில் ரூ. 2,602ல் A மற்றும் Bன் பங்குகள்

(A) ரூ. 1,300, ரூ. 1,252
(B) ரூ. 1,452, ரூ. 1,150
(C) ரூ. 1,302, ரூ. 1,300
(D) ரூ. 1,352, ரூ. 1,250
(E) விடை தெரியவில்லை

142. Find the simple interest on Rs. 68,000 at $16\frac{2}{3}\%$ per annum for 9 months.

(A) Rs. 8,500
(B) Rs. 8,000
(C) Rs. 9,400
(D) Rs. 9,100
(E) Answer not known

ரூ. 68,000க்கு 9 மாதங்களுக்கு $16\frac{2}{3}\%$ வருட வட்டி விகிதத்தில் தனி வட்டி காண்க.

(A) ரூ. 8,500
(B) ரூ. 8,000
(C) ரூ. 9,400
(D) ரூ. 9,100
(E) விடை தெரியவில்லை

143. If $a : b = 3 : 7$ and $b : c = 7 : 6$, then Find the ratio between $c$ and $a$

(A) 1 : 2
(B) 3 : 6
(C) 6 : 7
(D) 2 : 1
(E) Answer not known

$a : b = 3 : 7$ மற்றும் $b : c = 7 : 6$ எனில் $c$ மற்றும் $a$ இவற்றின் விகிதம் காண்க.

(A) 1 : 2
(B) 3 : 6
(C) 6 : 7
(D) 2 : 1
(E) விடை தெரியவில்லை

144. The ratio of two numbers is 3 : 4 and H.C.F is 4. Their L.C.M. is ______________.

(A) 48
(B) 38
(C) 58
(D) 68
(E) Answer not known

இரண்டு எண்களின் விகிதம் 3 : 4 மேலும் அதன் மீ.பொ.வ மதிப்பு 4 எனில் அவைகளின் மீ.சி.ம. ____________.

(A) 48
(B) 38
(C) 58
(D) 68
(E) விடை தெரியவில்லை

145. A number $x$ is divisible by 13. When this number is divided by 16, 24, 32 it leaves a remainder 6 in each case. The least value of $x$ is ______________.

(A) 390
(B) 391
(C) 389
(D) 392
(E) Answer not known

ஒரு எண் $x$ ஆனது 13 ஆல் வகுபடும். இந்த எண் 16, 24 மற்றும் 32 ஆல் வகுக்கும் போது ஒவ்வொரு முறையும் மீதி 6 கிடைக்கிறது எனில் $x$ ன் மிகச்சிறிய மதிப்பு ____________.

(A) 390
(B) 391
(C) 389
(D) 392
(E) விடை தெரியவில்லை

146. There are 80 students in a class. If 25% are absent on a particular day. Find the number of students present in the class.

(A) 10
(B) 60
(C) 30
(D) 25
(E) Answer not known

ஒரு வகுப்பில் 80 மாணவர்கள் உள்ளனர். ஒரு குறிப்பிட்ட நாளில் 25% பேர் வருகைபுரியவில்லை எனில் வருகை புரிந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் கண்டறியவும்.

(A) 10
(B) 60
(C) 30
(D) 25
(E) விடை தெரியவில்லை

147. The ratio of boys and girls in a class is 5 : 3. If 16% of boys and 8% of girls failed in an examination, then find the percentage of passed students.

(A) 87%
(B) 13%
(C) 84%
(D) 92%
(E) Answer not known

ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் மற்றும் மாணவிகளின் விகிதம் 5 : 3 ஆகும். ஒரு தேர்வில் 16% மாணவர்களும், 8% மாணவிகளும் தேர்ச்சி பெறவில்லை எனில் தேர்ச்சி பெற்ற மாணவ – மாணவிகளின் சதவீதத்தைக் காண்க.

(A) 87%
(B) 13%
(C) 84%
(D) 92%
(E) விடை தெரியவில்லை

148. Find the sum of

$1 + 3 + 5 + \cdots + 55$

(A) 700
(B) 784
(C) 555
(D) 550
(E) Answer not known

தொடரின் கூடுதல் காண்க.

$1 + 3 + 5 + \cdots + 55$

(A) 700
(B) 784
(C) 555
(D) 550
(E) விடை தெரியவில்லை

149. The next term in the given sequence is

0, 2, 24, 252, 3120, ________.

(A) 42450
(B) 46650
(C) 38450
(D) 44650
(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர் வரிசையில் வரும் அடுத்த உறுப்பு

0, 2, 24, 252, 3120, ________.

(A) 42450
(B) 46650
(C) 38450
(D) 44650
(E) விடை தெரியவில்லை

150. In the series

6 4 1 2 2 8 7 4 2 1 5 3 8

how many pairs of successive numbers have a difference of 2 each?

(A) One
(B) Two
(C) Three
(D) Four
(E) Answer not known


இந்த தொடர்ச்சி எண்களில்

6 4 1 2 2 8 7 4 2 1 5 3 8

இரண்டு வித்தியாசத்தை உடைய எண்களில் எத்தனை இணைகள் உள்ளன?

(A) ஒன்று
(B) இரண்டு
(C) மூன்று
(D) நான்கு
(E) விடை தெரியவில்லை


151. A dice is thrown four times and its four different positions are given below




Find the number on the face opposite the face showing 2.

(A) 4 (B) 5
(C) 6 (D) 3
(E) Answer not known

ஒரு பகடை 4 முறை உருட்டப்படும் போது அதன் 4 வேறுபட்ட நிலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.




2-ன் எதிர் பக்கமாக இருக்கும் எண்ணைக் காண்க.

(A) 4 (B) 5
(C) 6 (D) 3
(E) விடை தெரியவில்லை

152. Find the missing term of the sequence :

7, 12, 19, 24, 43, ________, 91

(A) 50 (B) 45
(C) 48 (D) 63
(E) Answer not known

தொடர் வரிசையில் உள்ள விடுபட்ட எண்ணைக் காண்க.

7, 12, 19, 24, 43, ________, 91

(A) 50 (B) 45
(C) 48 (D) 63
(E) விடை தெரியவில்லை

153. Identify the correct answer.

Assertion [A] : Space MAITRI is a collaborative space mission between India and Australia.

Reason [R] : India aims to lower the cost of access to space through this mission.

(A) Both [A] and [R] are correct and [R] is the correct explanation for [A]

(B) Both [A] and [R] are correct, but [R] is not the correct explanation for [A]

(C) [A] is correct but [R] is wrong

(D) [A] is wrong but [R] is correct

(E) Answer not known

சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

கூற்று [A] : ஸ்பேஷ் MAITRI என்பது இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவிற்கு இடையிலான கூட்டு விண்வெளி திட்டம்.

காரணம் [R] : இத்திட்டத்தின் மூலம் விண்வெளிக்கான அணுகல் செலவினை இந்தியா குறைக்க எண்ணுகிறது.

(A) [A] மற்றும் [R] சரியே, மேலும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கமாகும்

(B) [A] மற்றும் [R] சரி, ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

(C) [A] சரியே, ஆனால் [R] தவறு

(D) [A] தவறு ஆனால் [R] சரி

(E) விடை தெரியவில்லை

154. Which of the following statement(s) is/are true about the agricultural cultivation of 2021-2022 in Tamilnadu?

(i) Mayiladuthurai District involved more Paddy cultivation in Tamilnadu.

(ii) Perambalur District involved more Maize cultivation in Tamilnadu.

(iii) Kallakurichi involved more Sugarcane cultivation in Tamilnadu.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only
(E) Answer not known

பின்வருவனவற்றில் 2021-2022-ம் ஆண்டில் தமிழ்நாட்டின் வேளாண்மை சாகுபடியோடு தொடர்புடைய உண்மையான கூற்று(க்கள்) எவை/யாவை?

(i) மயிலாடுதுறையில் தமிழ்நாட்டிலே அதிகமான பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது.

(ii) பெரம்பலூரில் தமிழ்நாட்டிலே அதிகமாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டது.

(iii) கள்ளக்குறிச்சியில் தமிழ்நாட்டிலே அதிகமாக கரும்பு சாகுபடி செய்யப்பட்டது.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்
(E) விடை தெரியவில்லை

155. Identify the correct answer after understanding the Assertion and the Reason.

Assertion [A] : As per the Economic Survey of Tamilnadu 2024-2025 the Urban inflation in Tamilnadu is coming down from 6% in 2019-2020 to 4.5% in 2024-2025. While rural inflation is static at 5.4%.

Reason [R] : It is mainly due to the Governments' policy on the Tamilnadu Public Distribution System and other income support schemes like, Kalignar Mahalir Urimai Thittam and hundred days employment guarantee schemes.

(A) [A] is true [R] is false
(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
(C) [A] is false [R] is true
(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]
(E) Answer not known

கூற்று மற்றும் காரணத்தை நன்றாக புரிந்து கொண்ட பின் சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

கூற்று [A] : தமிழ்நாட்டின் 2024-2025 பொருளாதார ஆய்வறிக்கையின் படி தமிழ்நாட்டின் நகர்ப்புற பணவீக்கம் 2019-2020 ஆம் ஆண்டில் 6% லிருந்து 2024-2025 ஆம் ஆண்டில் 4.5% ஆகக் குறைந்து காணப்படுகிறது. அதே நேரத்தில் கிராமப்புற பணவீக்கம் 5.4% என்ற விகிதத்தில் நிலையாக உள்ளது.

காரணம் [R] : இது முக்கியமாக அரசாங்கத்தினால் அமல்படுத்தப் பெறும் தமிழ்நாடு பொது விநியோகத் திட்டம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்றும் நூறு நாள் வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் போன்ற பிற வருமான ஆதரவுத் திட்டங்களால் ஏற்படுகிறது.

(A) [A] சரி [R] தவறு
(B) [A] மற்றும் [R] சரி மற்றும் [R] ஆனது [A] யினுடைய சரியான விளக்கம் ஆகும்
(C) [A] தவறு [R] சரி
(D) [A] மற்றும் [R] சரி ஆனால் [R] ஆனது [A] யினுடைய சரியான விளக்கம் அல்ல
(E) விடை தெரியவில்லை

156. Assertion [A] : The "Illam Thedi Kalvi" scheme in Tamilnadu aims to bridge learning gaps among school students caused by the Covid-19 Pandemic.

Reason [R] : The scheme involves volunteers providing remedial education to students at their homes.

(A) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(B) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]

(C) [A] is true but [R] is false

(D) [A] is false but [R] is true

(E) Answer not known

கூற்று [A] : கோவிட்-19 பெருந்தொற்றால் பள்ளி மாணவர்களிடையே ஏற்படும் கற்றல் இடைவெளிகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாட்டில் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

காரணம் [R] : இந்தத் திட்டத்தில், தன்னார்வலர்கள் மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று மாற்றுவழிகள் கொண்ட கல்வியை வழங்குகிறார்கள்.

(A) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, மற்றும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம்

(B) [A] மற்றும் [R] இரண்டும் உண்மை, ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கமில்லை

(C) [A] உண்மை ஆனால் [R] தவறானது

(D) [A] தவறானது ஆனால் [R] சரியானது

(E) விடை தெரியவில்லை

157. Which of the following statement(s) is/are true about "The Mandal Commission Report"?

(i) The commission used Three indicators i.e. Social, Educational and Economic.

(ii) In social indicator there were five criteria and educational indicators there were two criteria.

(iii) In economic indicator there were four criteria. Thus there were 11 criteria used in the Mandal Commission Report.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only
(E) Answer not known

பின்வருவனவற்றுள் மண்டல் கமிஷன் அறிக்கையோடு தொடர்புடைய சரியான கூற்று(க்கள்) எது/யாவை?

(i) இந்த ஆணையமானது சமூகம், கல்வி மற்றும் பொருளாதாரம் என்ற மூன்று குறிகாட்டிகளை பயன்படுத்தியுள்ளது.

(ii) சமூக குறிகாட்டியில் ஐந்து அளவுகோல்களும் மற்றும் கல்வி குறிகாட்டியில் இரண்டு அளவுகோல்களும் பயன்படுத்தப் பெற்றன.

(iii) பொருளாதார குறிகாட்டியில் நான்கு அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன. ஆக மொத்தம் 11 அளவுகோல்கள் மண்டல் கமிஷன் அறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்
(E) விடை தெரியவில்லை

158. What was the cause for high inflation in India?

(A) High demand
(B) Weaken rupee against the dollar
(C) Low production
(D) Low money supply
(E) Answer not known

இந்தியாவின் பணவீக்கம் அதிகமாக இருப்பதற்கான காரணம்

(A) அதிக தேவை
(B) டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு குறைவு
(C) குறைவான உற்பத்தி
(D) குறைவான பண அளிப்பு
(E) விடை தெரியவில்லை

159. Arrange poverty eradication schemes in chronological order.

1. National Rural Livelihood Mission
2. Rajiv Awas Yojana
3. Bharat Nirman Yojana
4. National Food Security Scheme

(A) 1 2 4 3
(B) 3 1 4 2
(C) 3 2 1 4
(D) 2 3 4 1
(E) Answer not known

வறுமை ஒழிப்பு திட்டங்களை கால வரிசைப்படுத்தி எழுதுக.

1. தேசிய ஊரக வாழ்வாதார திட்டம்
2. ராஜீவ் ஆவாஸ் யோஜனா
3. பாரத் நிர்மான் யோஜனா
4. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்

(A) 1 2 4 3
(B) 3 1 4 2
(C) 3 2 1 4
(D) 2 3 4 1
(E) விடை தெரியவில்லை

160. Which of the following is incorrectly paired?

(1) MFAL – Marginal Farmers and Agricultural Labourer Development Agency

(2) DPAP – Drought Prone Area Programme

(3) DDP – District Development Programme

(4) HDA – Hills Development Agencies

(A) (1) and (2)

(B) (1) and (3)

(C) (3) and (4)

(D) (2) and (3)

(E) Answer not known

பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுத்து எழுதுக.

(1) MFAL – இறுதிநிலை விவசாயி மற்றும் விவசாயக் கூலி தொழிலாளி முன்னேற்றத் திட்டம்

(2) DPAP – வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டம்

(3) DDP – மாவட்ட வளர்ச்சித் திட்டம்

(4) HDA – மலைப் பகுதிக்கான முன்னேற்றத் திட்டம்

(A) (1) மற்றும் (2)

(B) (1) மற்றும் (3)

(C) (3) மற்றும் (4)

(D) (2) மற்றும் (3)

(E) விடை தெரியவில்லை

161. Identify the incorrect Acronym :

(1) TSC – Total Sanitation Campaign

(2) NIC – National Information Centre

(3) MIS – Management Information System

(4) IMIS – Integrated Management Infrastructure System

(A) (1), (2), (3) and (4)

(B) (1), (2) and (3)

(C) (1), (2) and (4)

(D) (4) only

(E) Answer not known

பின்வருவனவற்றுள் தவறான இணைப்பு எது?

(1) TSC – முழு உடல் நலம் காக்கும் நடவடிக்கை

(2) NIC – தேசிய தகவல் மையம்

(3) MIS – மேலாண்மைத் தகவல் முறை

(4) IMIS – ஒருங்கிணைந்த மேலாண்மை உள்கட்டமைப்பு முறை

(A) (1), (2), (3) மற்றும் (4)

(B) (1), (2) மற்றும் (3)

(C) (1), (2) மற்றும் (4)

(D) (4) மட்டும்

(E) விடை தெரியவில்லை

162. Choose the correct pair :

| | | | |
|---|---|---|---|
| 1. | Bombay plan | – | 1940 |
| 2. | Gandhian plan | – | 1945 |
| 3. | People's plan | – | 1944 |
| 4. | Sarvodaya plan | – | 1950 |

(A) 2 and 3 are correct
(B) 1 and 2 are correct
(C) 1 and 4 are correct
(D) 2 and 4 are correct
(E) Answer not known

சரியான இணையைத் தேர்ந்தெடு :

| | | | |
|---|---|---|---|
| 1. | பாம்பே திட்டம் | – | 1940 |
| 2. | காந்தியத் திட்டம் | – | 1945 |
| 3. | மக்கள் திட்டம் | – | 1944 |
| 4. | சர்வோதயத் திட்டம் | – | 1950 |

(A) 2 மற்றும் 3 சரி
(B) 1 மற்றும் 2 சரி
(C) 1 மற்றும் 4 சரி
(D) 2 மற்றும் 4 சரி
(E) விடை தெரியவில்லை

163. Kokkokka Koompum Paruvaththu Matradhan

Kuththokka Seerththa Itaththu

As Heron with folded wing, so wait in waiting hour; As Heron snaps its prey, when fortune smiles, put forth your power - Denotes.

(1) To act like a Heron is incorrect.

(2) You must wait till the Time Ripens.

(3) This Kural appears in the Chapter titled "Therinthu Thelithal".

(4) "Vaadiyirukkumaam Kokku" is the phrase best suited to this Thirukkural.

(A) (1) – Right (2) – Wrong (3) – Wrong (4) – Wrong

(B) (1) – Wrong (2) – Right (3) – Right (4) – Wrong

(C) (1) – Wrong (2) – Right (3) – Wrong (4) – Right

(D) (1) – Right (2) – Wrong (3) – Right (4) – Right

(E) Answer not known

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்

குத்தொக்க சீர்த்த விடத்து

இக்குறட்பாவின் கருத்து

(1) கொக்கைப் போன்று செயல்படுவது தவறு.

(2) காலம் கைகூடுவதற்குக் காத்திருக்க வேண்டும்.

(3) இக்குறள் தெரிந்துதெளிதல் என்னும் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது.

(4) 'வாடியிருக்குமாம் கொக்கு' என்ற சொல் இக்குறட்பாவிற்குப் பொருத்தமான விளக்கம் தரும்.

(A) (1) – சரி (2) – தவறு (3) – தவறு (4) – தவறு

(B) (1) – தவறு (2) – சரி (3) – சரி (4) – தவறு

(C) (1) – தவறு (2) – சரி (3) – தவறு (4) – சரி

(D) (1) – சரி (2) – தவறு (3) – சரி (4) – சரி

(E) விடை தெரியவில்லை

164. "Manaththodu vaiymai mozhiyin thavaththodu

Thaananj Seiyvaarin Thalai".

Statement 1 : Those who speak the TRUTH are always more superior than those who practice charity or penance.

Statement 2 : Those who practice charity and penance are far better than who speak the TRUTH.

(A) Statement 1 – Correct

(B) Statement 2 – Correct

(C) Statement 1 and 2 – Correct

(D) Statement 1 and 2 – Incorrect

(E) Answer not known

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு

தானஞ்செய் வாரின் தலை".

கூற்று 1 : வாய்மை பேசுபவர்கள் தானம், தவம் செய்பவர்களை விட சிறந்தவர்கள்.

கூற்று 2 : வாய்மையே பேசினாலும் தானம், தவம் செய்பவரே சிறந்தவர்.

(A) கூற்று 1 – சரி

(B) கூற்று 2 – சரி

(C) கூற்று 1, 2 – சரி

(D) கூற்று 1, 2 – தவறு

(E) விடை தெரியவில்லை

165. Match the following type :

(a) Iyotheethass Pandithar — 1. Tahdhip-ul-Akhluq

(b) Ramalinga Adigal — 2. Gulamgiri

(c) Jotiba Phule — 3. Thiruvarutpa

(d) Syed Ahmed Khan — 4. Oru Paisa Tamilan

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) Answer not known

பொருத்துக.

(a) அயோத்திதாசப் பண்டிதர் — 1. தத்கிப்-ஒல்-அக்லுக்

(b) இராமலிங்க அடிகள் — 2. குலாம்கிரி

(c) ஜோதிபா பூலே — 3. திருவருட்பா

(d) சையது அகமது கான் — 4. ஒரு பைசாத் தமிழன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

166. Assertion [A] : K.M. Balasubramanian, author of South Indian Celebrities compared Dr. C. Natesa Mudaliyar to Mahathma Gandhi.

Reason [R] : He was the epitome of love, character, tolerance, compromise and he was the heart of Justice Party.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(C) [A] is false [R] is true

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : தென்னிந்திய பிரபலங்கள் (South Indian Celebrities) என்ற நூலின் ஆசிரியர் K.M. பாலசுப்பிரமணியன், டாக்டர். சி. நடேச முதலியாரை மகாத்மா காந்தியுடன் ஒப்பிட்டு எழுதினார்.

காரணம் [R] : நீதிக்கட்சியின் இதயமாகத் திகழ்ந்த நடேச முதலியார் அன்புக்கும், பண்புக்கும், பொறையுடைமைக்கும், சமரச மனப்பான்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

(B) கூற்று [A], காரணம் [R] இரண்டும் சரி மேலும் காரணம் [R] கூற்று [A] ன் சரியான விளக்கம் ஆகும்.

(C) கூற்று [A] தவறு காரணம் [R] சரி

(D) கூற்று [A] காரணம் [R] இரண்டும் சரி, ஆனால் காரணம் [R] கூற்று [A] வை விளக்கவில்லை என்பது சரி

(E) விடை தெரியவில்லை

167. Which of the following statements are true about Ramalinga Adigal?

(i) He said that apart from musical Instruments the mind should unite.

(ii) He started night schools for farmers.

(iii) He said that through human charity one should get full benefit in life and be one with God.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

இராமலிங்க அடிகளாரைப் பற்றிய எந்தக் கருத்து சரியானது?

(i) இசைக் கருவிகள் தவிர்த்து மனம் ஒன்றிடல் வேண்டும் என்றார்.

(ii) விவசாயிகளுக்காக இரவு நேரப் பள்ளியைத் தொடங்கினார்.

(iii) மனிதத் தொண்டாற்றல் மூலம் வாழ்வில் முழுப் பயனைப் பெற்று இறையோடு ஒன்ற வேண்டும் என்றார்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

168. Assertion [A] : In 1930 Muthulakshmi Ammaiyar introduced in the Madras Legislative Council a Bill on the prevention of the dedication of woman of Hindu temples in the 'Presidency of Madras'.

Reason [R] : The Bill which later became the Devadasi Abolition Act, declared the "Pottukattu Ceremony" Illegal.

(A) [A] is true but [R] is false

(B) [A] is false but [R] is true

(C) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : 1930-ல் சென்னை சட்டமன்றத்தில் முத்துலட்சுமி அம்மையார் சென்னை மாகாணத்தில் இந்து கோவில்களுக்குப் பெண்கள் "அர்ப்பணிக்கப்படுவதை தடுப்பது" எனும் மசோதாவை அறிமுகப்படுத்தினார்.

காரணம் [R] : பின்னர் தேவதாசி ஒழிப்புச் சட்டமாக மாறிய இம்மசோதா "பொட்டுக் கட்டும் சடங்கு" நடத்துவது சட்டத்திற்குப் புறம்பானது என அறிவித்தது.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] தவறு ஆனால் [R] சரி

(C) [A] மற்றும் [R] சரி மேலும் [R], [A] யின் சரியான விளக்கம்

(D) [A] மற்றும் [R] சரி ஆனால் [R], [A] யின் சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

169. Assertion [A] : Under the leadership of Rajaji, Congress decided to boycott Simon Commission in Chennai.

Reason [R] : The Simon Commission had only Whitemen as members that is no Indians.

(A) [A] is true, [R] is false

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, and [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : சென்னையில் இராஜாஜி தலைமையில் சைமன் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது.

காரணம் [R] : சைமன் குழுவில் உறுப்பினர் அனைவரும் வெள்ளையரே, அதாவது குழுவில் இந்தியரே இல்லை.

(A) [A] சரி, [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A] -ன் சரியான விளக்கம் ஆகும்

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A] -ன் சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

170. Match the Works/Books with the author's :

| | | | |
|---|---|---|---|
| (a) | Vetriverkai | 1. | Avaiyar |
| (b) | Nanneri | 2. | Kumara Kurubarar |
| (c) | Neethinerivilakam | 3. | Athiveerarama Pandiyar |
| (d) | Nalvazhi | 4. | Duraimangalam Sivaprakasar |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) Answer not known

கீழ்கண்ட நூல்களை ஆசிரியர்களோடு பொருத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | வெற்றிவேற்கை | 1. | ஔவையார் |
| (b) | நன்னெறி | 2. | குமரகுருபரர் |
| (c) | நீதிநெறி விளக்கம் | 3. | அதிவீரராம பாண்டியர் |
| (d) | நல்வழி | 4. | துறைமங்கலம் சிவப்பிரகாசர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

171. Match correctly the Excavated places with their corresponding Districts.

(a) Azhagankulam — 1. Sivagangai

(b) Vasavasamudram — 2. Erode

(c) Kodumanal — 3. Kanchipuram

(d) Keezhadi — 4. Ramanathapuram

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) Answer not known

பின்வருவனவற்றுள் அகழ்வாராய்ச்சி நடைபெற்ற ஊர்களை அவ்வூர் அமைந்துள்ள மாவட்டத்துடன் பொருத்திக் காட்டுக.

(a) அழகன்குளம் — 1. சிவகங்கை

(b) வசவசமுத்திரம் — 2. ஈரோடு

(c) கொடுமணல் — 3. காஞ்சிபுரம்

(d) கீழடி — 4. இராமநாதபுரம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

172. Match the diseases in Column I with the site of infectious in Column II :

| | Column I | | Column II |
|---|---|---|---|
| (a) | Dengue | 1. | Intestine, Brain |
| (b) | Polio myelitis | 2. | Skin and Blood |
| (c) | Measels | 3. | Respiratory tract and Nervous system |
| (d) | Chicken Pox | 4. | Skin and Respiratory tract |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) Answer not known

கீழ்க்காணும் நோய்களும் (Column I) அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் (Column II) பொருத்துக :

| | Column I | | Column II |
|---|---|---|---|
| (a) | டெங்கு | 1. | குடல், மூளை |
| (b) | இளம்பிள்ளை வாதம் | 2. | தோல், இரத்தம் |
| (c) | தட்டம்மை | 3. | சுவாசப்பாதை, நரம்பு மண்டலம் |
| (d) | சின்னம்மை | 4. | தோல், சுவாசப்பாதை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

173. Assertion [A] : Cobalt-60 is useful in Cancer therapy.

Reason [R] : Cobalt-60 is source of $\gamma$ - radiations capable of killing cancerous cells.

(A) Both [A] and [R] are correct and the [R] is a correct explanation of the [A]

(B) Both [A] and [R] are correct but the [R] is not a correct explanation of the [A]

(C) [A] is correct but [R] is incorrect

(D) Both [A] and [R] are incorrect

(E) Answer not known

கூற்று [A] : கோபால்ட்–60 புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுகிறது.

காரணம் [R] : கோபால்ட்–60 காமா-கதிர்களின் மூலமாக செயல்பட்டு புற்றுநோய் செல்களை அழிக்க வல்லது.

(A) [A] மற்றும் [R] சரி மேலும் [R] என்பது [A] க்கான சரியான விளக்கம்

(B) [A] மற்றும் [R] சரி ஆனால் [R] என்பது [A] க்கான சரியான விளக்கம் இல்லை

(C) [A] சரி ஆனால் [R] தவறு

(D) [A] மற்றும் [R] இரண்டும் தவறு

(E) விடை தெரியவில்லை

174. In Tamil Nadu, Vidiyal Payanam Scheme introduced in the month of

(A) May, 2021

(B) December, 2021

(C) March, 2022

(D) October, 2021

(E) Answer not known

தமிழ்நாட்டில், விடியல் பயணம் திட்டம் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?

(A) மே, 2021

(B) டிசம்பர், 2021

(C) மார்ச், 2022

(D) அக்டோபர், 2021

(E) விடை தெரியவில்லை

175. Assertion [A] : Climate, Relief, Soil and Natural resources are influencing the distribution of population.

Reason [R] : Birth and death rate does not affect the distribution of population.

(A) [A] is true, but [R] is false

(B) [A] is false, but [R] is true

(C) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : காலநிலை, நிலத்தோற்றம், மண் மற்றும் இயற்கை வளங்கள் போன்றவை மக்கள் தொகைப் பரவலைக் கட்டுப்படுத்துகின்றன.

காரணம் [R] : பிறப்பு, இறப்பு விகிதங்கள் மக்கள் தொகைப் பரவலை பாதிக்கவில்லை.

(A) [A] சரி, ஆனால் [R] தவறு

(B) [A] தவறு, ஆனால் [R] சரி

(C) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A] க்கான சரியான விளக்கம்

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] யின் சரியான விளக்கம் இல்லை

(E) விடை தெரியவில்லை

176. Match the following :

| Shifting cultivation | | Region |
|---|---|---|
| (a) Ladang | 1. | Malaysia |
| (b) Milpa | 2. | Vietnam |
| (c) Roca | 3. | Brazil |
| (d) Ray | 4. | Mexico |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) Answer not known

கீழ்கண்டவற்றை பொருத்துக :

| இடப்பெயர்வு வேளாண்மை | | பகுதி |
|---|---|---|
| (a) லடாங் | 1. | மலேசியா |
| (b) மில்பா | 2. | வியட்நாம் |
| (c) ரோக்கா | 3. | பிரேசில் |
| (d) ரே | 4. | மெக்ஸிகோ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

177. Match the following :

| | Author | | Work |
|---|---|---|---|
| (a) | Amoghavarsha | 1. | Mahapurana |
| (b) | Jinasena | 2. | Kavirajamarga |
| (c) | Gunabhadra | 3. | Kadambari |
| (d) | Bana | 4. | Adipurana |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக.

| | ஆசிரியர் | | நூல் |
|---|---|---|---|
| (a) | அமோகவர்ஷர் | 1. | மகாபுராணம் |
| (b) | ஜீனசேனர் | 2. | கவிராஜமார்க்கம் |
| (c) | குணபத்ரர் | 3. | காதம்பரி |
| (d) | பாணர் | 4. | ஆதிபுராணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

178. Which of the following statements are true about Velu Nachiyar?

(i) Velu Nachiyar was the daughter of Chellamuthu Sethupathi, King of Sivagangai.

(ii) Velu Nachiyar's husband was assassinated by the Nawab Army and to attack the Nawab and British. She joined with Gopal Naicker and Hyder Ali.

(iii) In 1790, she died due to illness.

(A) (ii) only
(B) (i) and (iii)
(C) (i) and (ii)
(D) (ii) and (iii)
(E) Answer not known

கீழ்க்கண்ட கூற்றுகளில் வேலுநாச்சியார் பற்றி எது/எவை சரியானவை?

(i) வேலுநாச்சியார் சிவகங்கை அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார்.

(ii) வேலுநாச்சியாரின் கணவர் நவாபின் படைகளால் கொல்லப்பட்டதால் ஆங்கிலேயரைத் தாக்கும் நோக்கத்துடன் கோபால் நாயக்கர், ஹைதர் அலி ஆகியோருடன் கூட்டணி அமைத்தார்.

(iii) வேலுநாச்சியார் நோயுற்று 1790 -இல் இறந்தார்.

(A) (ii) மட்டும்
(B) (i) மற்றும் (iii)
(C) (i) மற்றும் (ii)
(D) (ii) மற்றும் (iii)
(E) விடை தெரியவில்லை

179. Which of the following points were accepted in Gandhi-Irwin Pact?

(i) People allowed to make salt for their consumption.

(ii) Not releasing the political prisoners who had not indulged in violence.

(iii) Permitted picketing of foreign cloth shops.

(iv) Reduced the death sentence of Bhagat Singh and his Comrades.

(A) (i) and (ii) only

(B) (i) and (iii) only

(C) (ii) and (iii) only

(D) (ii) and (iv) only

(E) Answer not known

கீழ்கண்டவற்றில் காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்கள் எவை?

(i) உப்பை சுய பயன்பாட்டுக்கு உற்பத்தி செய்ய அனுமதிப்பது.

(ii) வன்முறையில் ஈடுபடாத அரசியல் கைதிகளை தொடர்ந்து சிறையில் வைப்பது.

(iii) அந்நியத் துணிகளை விற்கும் கடைகளின் முன் ஆர்ப்பாட்டங்களை நடத்த அனுமதிப்பது.

(iv) பகத்சிங் மற்றும் அவரது தோழர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் குறைப்பது.

(A) (i) மற்றும் (ii) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

180. Consider the following statements and identify the correct answer :

(1) In 1918, Madurai Harvi Mill labours strike happened.

(2) B.B. Wadhiya was the labour union leader of Madurai Harvi Mill.

(3) Dr. P. Varadharajulu's speech was an eye opener to the government.

(4) Dr. P. Varadharajulu was the Author of "Prabanja Mitran" Magazine.

(A) (1) only
(B) (2) only
(C) (1), (3) and (4) only
(D) (1), (2) and (3) only
(E) Answer not known

பின்வருவனவற்றுள் எவை சரியானவை ?

(1) மதுரையில் ஹார்வி மில் தொழிலாளர்கள் 1918-இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

(2) மதுரை ஹார்வி மில் தொழிற்சங்கத் தலைவராக பி.பி. வாடியா இருந்தார்.

(3) டாக்டர். பி. வரதராசுலு அவர்களின் தொழிலாளர் ஆதரவு பேச்சு அரசாங்கத்தின் கண்களைத் திறக்கக் காரணமாயிற்று.

(4) டாக்டர். பி. வரதராசுலு "பிரபஞ்ச மித்திரன்" என்ற பத்திரிக்கையை நடத்தினார்.

(A) (1) மட்டும்
(B) (2) மட்டும்
(C) (1), (3) மற்றும் (4) மட்டும்
(D) (1), (2) மற்றும் (3) மட்டும்
(E) விடை தெரியவில்லை

181. False statements about Subhas Chandra Bose are:

(i) Subhas Chandra Bose was born on 23rd January 1897, in Calcutta, West Bengal.

(ii) The Government of India has declared his birthday, 23rd January as "Parakram Diwas".

(iii) To honour of Subhas Chandra Bose's legacy, 23rd January is a National holiday.

(A) (iii) only

(B) (i) and (ii) only

(C) (ii) and (iii) only

(D) (i) and (iii) only

(E) Answer not known

சுபாஷ் சந்திர போஸைப் பற்றி பின்வரும் கூற்றுகளில் தவறானது :

(i) சுபாஷ் சந்திர போஸ் ஜனவரி 23, 1897 அன்று மேற்கு வங்காளத்தின் கல்கத்தாவில் பிறந்தார்.

(ii) இந்திய அரசு அவரது பிறந்த நாளான ஜனவரி 23 ஆம் தேதியை "தைரிய நாள்" என்று அறிவித்துள்ளது.

(iii) சுபாஷ் சந்திர போஸின் பாரம்பரியத்தை போற்றும் வகையில் ஜனவரி 23 ஆம் தேதி தேசிய விடுமுறை நாளாகும்.

(A) (iii) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

182. Match the Presidents listed below with the distinguished guests who attended the Republic Day celebrations held under their leadership.

| Presidents | | Distinguished Guests |
|---|---|---|
| (a) Droupadi Murmu | 1. | Cyril Ramaphosa |
| (b) A.P.J. Abdul Kalam | 2. | Prabowo Subianto |
| (c) Pranab Mukherjee | 3. | Vladimir Putin |
| (d) Ram Nath Kovind | 4. | Barack Obama |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) Answer not known

குடியரசு தின விழாவிற்கு தலைமை வகித்தக் குடியரசுத் தலைவரையும் அவருடன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட விருந்தினரையும் பொருத்திக் காட்டுக.

| குடியரசுத் தலைவர்கள் | | சிறப்பு விருந்தினர்கள் |
|---|---|---|
| (a) திரௌபதி முர்மு | 1. | சிரில் ராமபோசா |
| (b) ஏ.பி.ஜே. அப்துல்கலாம் | 2. | பிரபோவா சுபியாண்டோ |
| (c) பிரணாப் முகர்ஜி | 3. | விளாடிமிர் புடின் |
| (d) ராம் நாத் கோவிந்த் | 4. | பராக் ஒபாமா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

183. Directorate of Vigilance and Anti-corruption Tamil Nadu Toll free No. is :

(1) 1062 and 1963

(2) 1064 and 1965

(3) 1066 and 1967

(4) 1068 and 1969

(A) (4)

(B) (2)

(C) (1)

(D) (3)

(E) Answer not known

தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குனரகத்தின் இலவச அழைப்பு எண்

(1) 1062 மற்றும் 1963

(2) 1064 மற்றும் 1965

(3) 1066 மற்றும் 1967

(4) 1068 மற்றும் 1969

(A) (4)

(B) (2)

(C) (1)

(D) (3)

(E) விடை தெரியவில்லை

184. Find out the correct statements on election

(i) In all the states elections EVMS were used in 2003.

(ii) The commission took a historic decision to use only EVMS for the Lok Sabha election in 2004.

(iii) Two million EVMS were used in this elections.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

தேர்தல் பற்றிய சரியான கூற்றுகளைக் கண்டறிக.

(i) 2003ல் எல்லா மாநில தேர்தலில் வாக்குப் பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

(ii) மக்களவைத் தேர்தல் 2004ல் வாக்குப் பதிவு இயந்திரம் மட்டும் பயன்படுத்தப்படும் என்றும் வரலாற்று முடிவை எடுத்துள்ளது ஆணையம்.

(iii) இரண்டு மில்லியன் வாக்குப் பதிவு இயந்திரம் இந்தத் தேர்தலில் பயன்படுத்தப்பட்டது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

185. Choose the right matches :

| | Committees | | Chairman |
|---|---|---|---|
| (1) | Committee on Panchayat Raj Election | – | K. Shanthanam |
| (2) | Committee on Rationalisation of Panchayat statistics | – | G. Ramachandran |
| (3) | Committee on Panchayat Raj Training centres | – | V.K. Rao |
| (4) | Study team on Panchayat Raj Administration | – | V. Iswaran |

(A) (1) and (3) are correct
(B) (1) and (4) are correct
(C) (2) and (3) are correct
(D) (3) and (4) are correct
(E) Answer not known

சரியானவற்றோடு பொருத்துக :

| | குழுக்கள் | | தலைவர் |
|---|---|---|---|
| (1) | பஞ்சாயத்து ராஜ் தேர்தல் குழு | – | K. சந்தானம் |
| (2) | பஞ்சாயத்து ராஜ் பகுப்பாய்வு மற்றும் புள்ளியல் குழு | – | G. ராமச்சந்திரன் |
| (3) | பஞ்சாயத்து ராஜ் பயிற்சி குழு | – | V.K. ராவ் |
| (4) | பஞ்சாயத்து ராஜ் நிர்வாகக் குழு | – | V. ஈஸ்வரன் |

(A) (1) மற்றும் (3) மட்டும் சரி
(B) (1) மற்றும் (4) மட்டும் சரி
(C) (2) மற்றும் (3) மட்டும் சரி
(D) (3) மற்றும் (4) மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை

186. The correct statements on the Directive principles of state policy are

(i) The Directive principles of the state policy are provided in Article 36 to 51 of the constitution.

(ii) The framers of the constitution borrowed this idea from the Spanish constitution.

(iii) The Directive principles form the soul of the constitution.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

அரசு வழிகாட்டும் நெறிமுறைகள் மீதான சரியான கூற்றானது.

(i) அரசு வழிகாட்டும் நெறிமுறைகள் உறுப்பு 36 முதல் 51 வரை அரசமைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(ii) அரசமைப்பை உருவாக்கியவர்கள் இந்த சிந்தனையை ஸ்பானிஷ் அரசமைப்பிடம் பெற்றனர்.

(iii) அரசு வழிகாட்டும் நெறிமுறைகள் என்பது அரசமைப்பின் ஆன்மாவாகும்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

187. Assertion [A] : Indian constitution is federal in nature.

Reason [R] : Indian constitution provides dual citizenship like United States of America.

(A) [A] is false [R] is true

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is true [R] is false

(D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : இந்திய அரசியலமைப்பு உள்ளடக்கம் கூட்டாட்சி அரசியலமைப்பு ஆகும்.

காரணம் [R] : இந்திய அரசியலமைப்பு ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) போல் இரட்டைக் குடியுரிமையை வழங்கியுள்ளது.

(A) கூற்று [A] தவறு காரணம் [R] சரி

(B) கூற்று [A] மற்றும் காரணம் [R] சரியானவை ஆகும், மற்றும் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்

(C) கூற்று [A] சரி காரணம் [R] தவறு

(D) கூற்று [A] மற்றும் காரணம் [R] சரியானவை ஆகும், ஆனால் காரணம் [R] கூற்று [A] ஐ சரியாக விளக்கவில்லை

(E) விடை தெரியவில்லை

188. Assertion [A] : Indian constitution has the qualities of both rigid and flexible.

Reason [R] : The constitution was amended more than 100 times without changing the foundations of the constitution.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, but [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct

(E) Answer not known

கூற்று [A] : இந்திய அரசமைப்பு நெகிழும் மற்றும் நெகிழாத் தன்மைகளை கொண்டுள்ளது.

காரணம் [R] : இந்திய அரசமைப்பின் அடிப்படையை மாற்றாமல் இதுவரை 100 க்கும் மேற்பட்ட மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

(A) கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

(B) கூற்று [A] காரணம் [R] இரண்டும் சரியானவைகள் ஆகும் மற்றும் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்

(C) கூற்று [A] தவறு ஆனால் காரணம் [R] சரி

(D) கூற்று [A] காரணம் [R] இரண்டும் சரியானவைகள் ஆகும், ஆனால் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கம் இல்லை என்பது சரி

(E) விடை தெரியவில்லை

189. The reading in a field book are as given below

| | To C (in meters) | |
|---|---|---|
| | 150 | |
| 20 to D | 120 | |
| | 80 | 50 to B |
| 30 to E | 50 | |
| | From A | |

The area of the field is

(A) 6550 $m^2$

(B) 7550 $m^2$

(C) 5750 $m^2$

(D) 5650 $m^2$

(E) Answer not known

நில அளவை புத்தகத்தில் நிலமானது பின்வருமாறு மதிப்புகள் குறிக்கப்பட்டுள்ளன

| | C வரை (மீட்டர்) | |
|---|---|---|
| | 150 | |
| 20 to D | 120 | |
| | 80 | 50 to B |
| 30 to E | 50 | |
| | A யிலிருந்து | |

நிலத்தின் பரப்பளவு என்பது

(A) 6550 மீ$^2$

(B) 7550 மீ$^2$

(C) 5750 மீ$^2$

(D) 5650 மீ$^2$

(E) விடை தெரியவில்லை

190. A person distributes his pens among four friends A, B, C and D in the ratio $\frac{1}{3}:\frac{1}{4}:\frac{1}{5}:\frac{1}{6}$ then the minimum number of pens that the person should have is ____________.

(A) 23
(B) 55
(C) 57
(D) 65
(E) Answer not known

ஒருவர் தன்னுடைய நான்கு நண்பர்கள் A, B, C மற்றும் D ஆகியவர்க்கு தனது பேனாக்களை $\frac{1}{3}:\frac{1}{4}:\frac{1}{5}:\frac{1}{6}$ ஆகிய விகிதங்களில் விநியோகிக்கிறார் எனில் அவர் வைத்திருக்க வேண்டிய பேனாக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை ____________.

(A) 23
(B) 55
(C) 57
(D) 65
(E) விடை தெரியவில்லை

191. If the ratios formed using the numbers 2, 5, $x$, 20 are in the same order of proportion, then the value of $x$ is

(A) 50
(B) 10
(C) 8
(D) 4
(E) Answer not known

2, 5, $x$, 20 ஆகிய எண்களை அதே வரிசையில் பயன்படுத்தி அமையும் விகிதங்கள் விகித சமமாக இருப்பின், '$x$' ன் மதிப்பு

(A) 50
(B) 10
(C) 8
(D) 4
(E) விடை தெரியவில்லை

192. If the HCF of 108 and 234 is expressible of the form $23x - 51$ then what is the value of $x$?

(A) 3 (B) 2

(C) 4 (D) 5

(E) Answer not known

108 மற்றும் 234 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியை $23x - 51$, என்ற வடிவில் எழுதினால் $x$-ன் மதிப்பு யாது?

(A) 3 (B) 2

(C) 4 (D) 5

(E) விடை தெரியவில்லை

193. Find the HCF of the polynomials $x^3 + x^2 - x + 2$ and $2x^3 - 5x^2 + 5x - 3$.

(A) $x^2 - x + 1$ (B) $x^2 + x - 1$

(C) $-7x^2 + 7x - 7$ (D) $7x^2 - 7x + 7$

(E) Answer not known

$x^3 + x^2 - x + 2$ மற்றும் $2x^3 - 5x^2 + 5x - 3$ ஆகிய பல்லுறுப்புக் கோவைகளின் மீ.பொ.கா. காண்க.

(A) $x^2 - x + 1$ (B) $x^2 + x - 1$

(C) $-7x^2 + 7x - 7$ (D) $7x^2 - 7x + 7$

(E) விடை தெரியவில்லை

194. Simplify : $(4^{-1}+4^{-2}+4^{-3})^0 \times (4^{-1}+4^{-2}+4^{-3})^1$.

(A) $\frac{63}{19}$ (B) $\frac{19}{63}$

(C) $\frac{21}{64}$ (D) $\frac{64}{21}$

(E) Answer not known

சுருக்குக: $(4^{-1}+4^{-2}+4^{-3})^0 \times (4^{-1}+4^{-2}+4^{-3})^1$.

(A) $\frac{63}{19}$ (B) $\frac{19}{63}$

(C) $\frac{21}{64}$ (D) $\frac{64}{21}$

(E) விடை தெரியவில்லை

195. The average mark of 25 students was found to be 78.4. Later on, it was found that score of 96 was misread as 69. Find the correct mean of the marks.

(A) 77.32 (B) 79.48

(C) 78.42 (D) 78.24

(E) Answer not known

25 மாணவர்களின் சராசரி மதிப்பெண் 78.4. இங்கு 96 என்ற மதிப்பானது 69 எனத் தவறுதலாக எடுக்கப்பட்டது கண்டறியப்பட்டது எனில், மதிப்பெண்களுக்கான சரியான சராசரியைக் காண்க.

(A) 77.32 (B) 79.48

(C) 78.42 (D) 78.24

(E) விடை தெரியவில்லை

196. D, F, G, H, I and M are sitting in a row. I and M are in the centre, and F and D are at the beginning and at the end. G is sitting on the left of D. Then who is sitting on the right of F?

(A) H
(B) I
(C) M
(D) G
(E) Answer not known

D, F, G, H, I மற்றும் M ஆகியோர் வரிசையாக அமர்ந்துள்ளனர். I மற்றும் M ஆகியோர் மையத்திலும், F மற்றும் D ஆகியோர் முதலிலும், இறுதியாகவும் அமர்ந்துள்ளனர். G என்பவர் D-யின் இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார். அப்படியானால் F-ன் வலதுபுறத்தில் அமர்ந்திருப்பது யார்?

(A) H
(B) I
(C) M
(D) G
(E) விடை தெரியவில்லை

197. If A = 26, SUN = 27, then CAT = ?

(A) 24
(B) 27
(C) 57
(D) 58
(E) Answer not known

A = 26, SUN = 27, எனில் CAT = ?

(A) 24
(B) 27
(C) 57
(D) 58
(E) விடை தெரியவில்லை

198. If $a \neq b \neq c$ is given, which one of the following is correct?

(A) $b \neq a \neq c$
(B) $a, b, c$ are distinct
(C) $a = b = c$
(D) $a \neq c$ or $a = c$
(E) Answer not known

$a \neq b \neq c$ எனக் கொடுக்கப்பட்டிருந்தால் பின்வருவனவற்றுள் எது சரி?

(A) $b \neq a \neq c$
(B) $a, b, c$ ஆகியவை வெவ்வேறானவை
(C) $a = b = c$
(D) $a \neq c$ அல்லது $a = c$
(E) விடை தெரியவில்லை

199. The missing term in the given alpha-numeric series is

2 X 2, 7 T 4, 14 P 12, 23 L 48, __________.

(A) 34 H 240
(B) 34 H 144
(C) 30 H 100
(D) 30 H 120
(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள எண் எழுத்து தொடரின் விடுபட்ட உறுப்பு

2 X 2, 7 T 4, 14 P 12, 23 L 48, __________.

(A) 34 H 240
(B) 34 H 144
(C) 30 H 100
(D) 30 H 120
(E) விடை தெரியவில்லை

200. Two unbiased dice are rolled once. Find the probability of getting the product of face value is 4 or the difference of the face value is 5.

(A) $\frac{1}{12}$
(B) $\frac{5}{36}$
(C) $\frac{1}{9}$
(D) $\frac{7}{36}$
(E) Answer not known

இரண்டு முறையான பகடைகள் உருட்டப்படும் பொழுது முகமதிப்புகளின் பெருக்கல் பலன் 4 அல்லது முக மதிப்புகளின் வித்தியாசம் 5 ஆக இருக்க நிகழ்தகவு?

(A) $\frac{1}{12}$
(B) $\frac{5}{36}$
(C) $\frac{1}{9}$
(D) $\frac{7}{36}$
(E) விடை தெரியவில்லை